ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:

# மணவாள மாமுனிகள் திருநாள் பாட்டு

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடு நாள்
சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடு நாள்
மந்தமதிப் புவிமானிடர் தங்களை வானிலுயர்த்திடு நாள்
மாசறு ஞானியர் சேரெதிராசர் தம் வாழ்வு முளைத்திடு நாள்
கந்தமலர்ப் பொழில்சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடு நாள்
காரமர்மேனி அரங்கநகர்க்கிறை கண்கள் களித்திடு நாள்
அந்தமில்சீர் மணவாளமுனிப் பரன் அவதாரம் செய்திடு நாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலமதெனும் நாளே

**மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**